



# நான் டொச் படிக்கிறேன் – எனது பிள்ளையும் படிக்கிறது

**அன்பான தாய்மார்களே, உங்கள் டொச் அறிவு குறைவாக அல்லது இன்மையாக இருந்து உங்களுக்குப் பாலர்வகுப்பிற்குப் போகிற வயதில் பிள்ளையும் இருந்தால் இந்த டொச் கல்வி உங்களுக்குப் பொருத்தமானது.** கீழ்வருவது போல் கேள்விகள் இருந்தால்? தொடர்புகொள்ளுங்கள்:

## ஏன் டொச் படித்தல் வேண்டும்?

டொச் கற்றால் சுவிசின் வாழ்கைமுறை மற்றும் பாடசாலை தொடர்பாக அறியலாம்.
டொச் கற்பதனால் குழுவிலுள்ள ஏனைய தாய்மார்களுடனும் ஆசிரியருடனும் பிள்ளை வளர்ப்பு மற்றும் நாளாந்த விடயங்களைக் கலந்துரையாடலாம்.
நீங்கள் டொச் கற்றால் உங்கள் பிள்ளைக்குப் பாலர் வகுப்பிலும் பாடசாலையிலும் உதவி செய்யலாம்.
நீங்கள் டொச் கற்றால் சுவிசின் கல்வித்திட்டத்தை அறிவதுடன் பிள்ளையின் ஆசிரியருடன் பெற்றோர் சந்திப்பில் கலந்துரையாடி விளக்கங்களைப் பெறலாம்.
நீங்கள் டொச் கற்றால் மொழி கற்பதில் பிள்ளைக்கு முன்மாதிரியாக விளங்கலாம்.

## எழுத வாசிக்கத் தெரியாமல் முக்கி டொச் கற்கைநெறியில் படிக்கலாமா?

இல்லை. உங்களுக்கு டொச் எழுத்துக்கள் எழுத வாசிக்கத்தெரிந்திருத்தல் வேண்டும்.

## பேர்ண் பகுதியில் வசிக்காவிட்டால் முக்கி டொச் கற்கைநெறியில் கலந்து படிக்கலாமா?

இக் கற்கைநெறி பேர்ண் நகரப் பகுதியில் வாழும் பெண்களுக்கு மட்டும் உரியது. கற்கை நெறிக்குழுவில் இடம் இருந்தால் மட்டும் வழமைக்குமாறாகச் சேர்த்து கொள்ளப்படுவார்கள்.

## எந்த வயதில் பிள்ளைகள் முக்கி டொச் கல்வியில் சேரலாம்?

பிள்ளைகள் கிட்டத்தட்ட 3 முதல் 5 வயதில் இருத்தல் வேண்டும். அதைவிடச் சிறிய பிள்ளைகளை திட்டநிர்வாகத்துடனும் ஆசிரியருடனும் கலந்துரையாடி முடியுமானால் பராமரிக்கலாம்.

## இந்த டொச் கல்வி பிள்ளைகளுக்கு ஏன் நன்மையளிக்கிறது?

பிள்ளைகள் ஏனைய பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடவும் கைவேலைகளைச் செய்யவும் பழகுவதை விரும்புவதால்.
டொச்சில் கதைகள் கேட்கவும் சிறிய பாட்டுக்கள் செய்யுட்கள்பாடவும் பழக விரும்புவதால்.
ஒரு குழுவில் கலந்து சரியாக நடந்து கொள்ளப் பழகுவதனால்.
மிக முக்கியமாக டொச் படிப்பார்கள். டொச்சை விளங்கிக் கொள்வதுடன் டொச் மொழியைக் கற்பார்கள். டொச் மொழியை விளங்கவும் வயதுக்கேற்ப பல பல சொற்களையும் கற்பார்கள். இது இவர்கள்பாலர்வகுப்பிற்கு செல்லும் போது உதவும்.

## ஆசிரியர்கள் யார்?

இந்த கற்கைநெறியில் டொச் மொழியை இரண்டாவது மொழியாகக் கற்பிப்பதற்கு அனுபவமும் தகமையும் பெற்ற ஆசிரியர்கள் கற்பிப்பார்கள்.

## எவ்வாறு முக்கி டொச் கல்வி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது?

கோடைகால விடுமுறையின் பின்பாக ஆரம்பித்து ஒரு வருடத்திற்கு நடைபெறும். நீங்கள் வாராந்தம் இரு மணித்தியாலங்கள் டொச் படிப்பீர்கள். கற்பதற்கான புத்தகங்கள் விடயங்கள் தரப்படும். பிள்ளைகள் இதே நேரத்தில் வேறாக பிள்ளைகளுக்குரிய அவர்களின் விளையாட்டுக் குழுவில் இரு திறமை வாய்ந்தவர்களால் இரு மணித்தியாலங்களுக்கு டொச்மொழி ஊக்குவிப்புக்ளைப் பெறுவார்கள். முக்கிடொச் கல்வி நகரத்தின் பலபகுதிகளில் நடைபெறுகிறது.

## கற்கைநெறியில் எத்தனை பேர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்?

6 முதல் 12 பெண்களும் 6 முதல் 12 பிள்ளைகளும் சேர்த்துகொள்ளப்படுவார்கள்.

## எவ்வாறு எப்போது விண்ணப்பித்தல் வேண்டும்?

விண்ணப்பப்படிவத்தை நிரப்பி **5 யூலைக்கு** முன்பாக படிவத்தின் பின்பக்கத்திலுள்ள விலாசத்திற்கு அனுப்புங்கள்! மேலதிக வெற்றிடங்கள் இருப்பின் நடந்து கொண்டிருக்கும் வகுப்பிலும் இடையில் சேர்ந்து கொள்ள முடியும்.

## முக்கிடொச் கல்விக்கான கட்டணம் எவ்வளவு?

ஒரு தாய்க்கும் ஒரு பிள்ளைக்கும் முழுக்கல்விக்கும் 300 பிராங்குகள் கட்டணம். கல்வி ஆரம்பத்தில் முழுத்தொகையையும் செலுத்துதல் வேண்டும். தேவைப்பட்டால் பகுதியாகவும் செலுத்தலாம். மேலதிக மாணவர் மாணவியைக் கொண்டுவருபவருக்கு 30 பிராங்குகள் கிடைக்கும்.

## கல்விநெறிக்காலத்தில் நீங்களோ உங்கள் பிள்ளையோ காப்புறுதிசெய்யப்படுவீர்களா?

இல்லை. நீங்கள் தனிப்பட்ட விபத்து மற்றும் பொருட்கள் பாதுகாப்புறுதியைச் செய்திருத்தல் வேண்டும்.

## மேலதிக தகவல்களை எங்கே பெறலாம்?

Schulamt der Stadt Bern, Effingerstrasse 21, 3008 Bern என்ற முகவரியில் உள்ள பேர்ண் நகரப் பாடசாலைத் திணைக்களத்தில் 031 321 64 78 தொலைபேசி இலக்கத்தினூடாக அல்லது மின்அஞ்சல் முகவரியில் schulamt@bern.ch. பெறலாம். இந்தத் தகவல் பிரசுரத்தை மேலதிக 11 மொழிகளில் http://www.bern.ch/stadtverwaltung/bss/schule இணையத்தளத்தினூடாகவும் பெற்றுக்கொள்ளலாம்.